தினமணி

ஈச்சங்கோட்டை பண்ணையில் ஜூலை 19-ல் கால்நடைகள் ஏலம்

First Published : 05 Jul 2012 12:24:13 PM IST

தஞ்சாவூர், ஜூலை 4: தஞ்சாவூர் மாவட்டம், ஈச்சங்கோட்டையில் உள்ள உயரின கால்நடை பெருக்குப் பண்ணையில் கால்நடைகள் ஏலம் ஜூலை 19-ம் தேதி நடைபெறவுள்ளது.

இதுகுறித்து ஈச்சங்கோட்டை உயரின கால்நடை பெருக்குப் பண்ணை அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:


இந்தப் பண்ணையில் பண்ணை உபயோகத்துக்குப் போக கழிவு செய்யப்பட்ட 12 கால்நடைகள் ஜூலை 19-ம் தேதி முற்பகல் 11.30 மணியளவில் பொது ஏலம் விடப்படும்.

---

தினமலர்
உண்மையின் உரைகல்

செயற்கை ரப்பர் பயன்பாடு 4.23 லட்சம் டன்னாக உயர்வு

ஜூலை 05,2012,23:54



புதுடில்லி: உள்நாட்டில், செயற்கை ரப்பர் பயன்பாடு, கடந்த 2011-12ம் நிதியாண்டில், 4.23 லட்சம் டன்னாக அதிகரித்துள்ளது. இது, இதற்கு முந்தைய 2010-11ம் நிதியாண்டை விட, 3 சதவீதம் (4.12 லட்சம் டன்) அதிகம் என, ரப்பர் வாரியம் வெளியிட்டுள்ள புள்ளி விவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.உற்பத்திஅதேசமயம், சென்ற நிதியாண்டில், உள்நாட்டில், இதன் உற்பத்தி, 1.11 லட்சம் டன்னாக இருந்தது. இது, இதற்கு முந்தைய நிதியாண்டில், 1.10 லட்சம் டன்னாக காணப்பட்டது. உள்நாட்டில், செயற்கை ரப்பர் உற்பத்தி குறைவாக இருப்பதால், நம் நாடு, வெளி நாடுகளிலிருந்து, இதை அதிகளவில் இறக்குமதி செய்து கொள்கிறது.கணக்கீட்டு ஆண்டுகளில், செயற்கை ரப்பர் இறக்குமதி, 8 சதவீதம் அதிகரித்து, 3.02 லட்சம் டன்னிடருந்து, 3.28 லட்சம் டன்னாக அதிகரித்துள்ளது. நாட்டின் மொத்த செயற்கை ரப்பர் பயன்பாட்டில், வாகன டயர் தயாரிப்பு நிறுவனங்களின் பங்களிப்பு, மிகவும் அதிகளவில் உள்ளது.சென்ற நிதியாண்டில், டயர் தயாரிப்பு நிறுவனங்களின் செயற்கை ரப்பர் பயன்பாடு, 3 சதவீதம் அதிகரித்து, 2.98 லட்சம் டன்னிலிருந்து, 3.08 லட்சம் டன்னாக உயர்ந்துள்ளது.டயர் தயாரிப்பு தவிர, டியூப்கள், காலணிகள், பெல்டுகள் உள்ளிட்ட பல்வேறு துறைகளில், செயற்கை ரப்பர் அதிகளவில் பயன்படுத்தப்படுகின்றன.உள்நாட்டில், இயற்கை மற்றும் செயற்கை ரப்பர் பயன்பாடு, 69:31 என்ற விகிதத்தில் உள்ளது. கணக்கீட்டு ஆண்டுகளில், இயற்கை ரப்பர் பயன்பாடு, 2 சதவீதம் வளர்ச்சிகண்டு, 9.47 லட்சம் டன்னிலிருந்து, 9.66 லட்சம் டன்னாக அதிகரித்துள்ளது.நடப்பாண்டு மார்ச் மாதத்தில், உள்நாட்டில், செயற்கை ரப்பர் பயன்பாடு, 36,280 டன்னாகஅதிகரித்துள்ளது. இது, கடந்த ஆண்டு இதே மாதத்தில், 36,025 டன்னாக இருந்தது.வாகன விற்பனைஇருப்பினும், சர்வதேச சுணக்க நிலையால், நடப்பாண்டில், உள்நாட்டில், வாகன விற்பனையில் தேக்கம் ஏற்பட்டுள்ளது. இதனால், டயர் தயாரிப்பு நிறுவனங்களின், செயற்கை ரப்பர் பயன்பாடு, சென்ற மார்ச் மாதத்தில், 26,289 டன்னாக குறைந்துள்ளது. இது, கடந்த ஆண்டு மார்ச் மாதத்தில், 26,295 டன்னாக இருந்தது.இதே மார்ச் மாதங்களில், செயற்கை ரப்பர் உற்பத்தி, 9,343 டன்னிலிருந்து, 8,135 டன்னாக சரிவடைந்துள்ளது. அதேசமயம், இறக்குமதி, 26, 275 டன்னிலிருந்து, 30,300 டன்னாக அதிகரித்துள்ளது. நடப்பாண்டு மார்ச் மாத இறுதி நிலவரப்படி, 50,325 டன் செயற்கை ரப்பர் கையிருப்பு இருந்ததாக என, ரப்பர் வாரியம் தெரிவித்துள்ளது.

## விவசாயிகளுக்கு அடிப்படை பயிற்சி

பதிவு செய்த நாள் : ஜுலை 06,2012,02:30 IST

நாமக்கல்: நாமக்கல்லில் உழவர் பயிற்சி நிலையம் சார்பில், விவசாயிகளுக்கான கிராம அடிப்படை பயிற்சி நடந்தது.

வேளாண் துணை இயக்குனர் நடராஜன் தலைமை வகித்தார். வேளாண் இணை இயக்குனர் (பொறுப்பு) கிருஷ்ணகுமார் பங்கேற்று பேசினார். பயிற்சி கூட்டத்தில் ஒருங்கிணைந்த பண்ணையம், தோட்டக்கலை மானியத் திட்டம், விதைச் சான்று துறை நடைமுறை உள்ளிட்டவை குறித்து விளக்கி கூறப்பட்டது. விவசாயிகளின் சந்தேகங்களுக்கும் விளக்கம் அளிக்கப்பட்டது. வேளாண் உதவி இயக்குனர் வரதராஜ், விதைசான்று உதவி இயக்குனர் சுப்ரமணியம் உட்பட பலர் பங்கேற்றனர்.

**வேளாண் அறிவியல் நிலையத்தில் கோழிக்குஞ்சு உற்பத்தி பயிற்சி**

பதிவு செய்த நாள் : ஜூலை 06,2012,02:30 IST

கருத்தை பதிவு செய்ய

நாமக்கல்: "நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில், வரும் 10ம் தேதி கோழிக்குஞ்சுகள் உற்பத்தி செய்யும் முறை குறித்து, ஒரு நாள் பயிற்சி நடக்க உள்ளது' என, அதன் ஒருங்கிணைப்பாளர் மோகன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கை:

நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில், குஞ்சுபொறிப்பானை பயன்படுத்தி, கோழிக்குஞ்சுகள் உற்பத்தி செய்யும் ஒரு நாள் இலவச பயிற்சி முகாம், வரும் 10ம் தேதி நடக்க உள்ளது.

பயிற்சியில், குஞ்சு பொறிப்பகத்தின் முக்கியத்துவம், அடை முட்டைகளை தேர்வு செய்தல், குஞ்சு பொரிப்பக பராமரிப்பு முறை குறித்து விளக்கம் அளிக்கப்பட உள்ளது.

அதில், கிராமப்புற விவசாயிகள் உட்பட விருப்பம் உள்ள அனைவரும் பங்கேற்கலாம். பயிற்சியில் பங்கேற்க விருப்பம் உள்ளோர், வரும் 9ம் தேதிக்குள் வேளாண் அறிவியல் நிலையத்திற்கு நேரில் வந்தோ அல்லது 04286-266345, 266244, 266650 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

**மான்யம் வழங்கல்**

பதிவு செய்த நாள் : ஜூலை 05,2012,22:32 IST

கருத்தை பதிவு செய்ய

பண்ணைக்காடு : பண்ணைக்காட்டில் தேசிய தோட்டக்கலை இயக்க திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு நாற்று நடவு மான்ய காசோலை வழங்கபட்டது.

பண்ணைக்காடு பேரூராட்சி தலைவர் சண்முகசுந்தரம் தலைமை வகித்தார். தோட்டக்கலைத்துறை துணை இயக்குனர் ராஜாமுகமது முன்னிலை வகித்தார். ஒன்றியக்குழு தலைவர் ராதாகிருஷ்ணன்

கலந்து கொண்டார். பேரூராட்சி துணைத் தலைவர் முருகன் கவுன்சிலர்கள் செந்தில், ஜோதிமுருகன், சரவணன் மற்றும் விவசாயிகள் பங்கேற்றனர்.

## கொப்பரை இறக்குமதிக்கு தடை : விவசாயிகள் கோரிக்கை

பதிவு செய்த நாள் : ஜூலை 05,2012,21:57 IST

கருத்தை பதிவு செய்ய

கம்பம் : கொப்பரை இறக்குமதிக்கு அரசு உடனடியாக தடை விதித்து, கொள்முதலை துவக்க முன்வர வேண்டும் என்று தென்னை விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தேங்காய்க்கு கட்டுபடியான விலை கிடைக்கவில்லை என்று கூறி தென்னை விவசாயிகள் தேங்காய் உடைப்பு போராட்டம் நடத்தியுள்ளனர்.

தேனி மாவட்டத்தில் 10 ஆயிரம் ஹெக்டேர் பரப்பில் தென்னை சாகுபடி செய்யப்படுகிறது. இதில் விவசாயிகள் தற்போது கடுமையான நெருக்கடியை சந்தித்து வருகின்றனர். சாகுபடி செலவுகள், வெட்டு கூலி, சுமை கூலி உள்ளிட்ட பல விஷயங்களில் திணறி வருகின்றனர்.

உற்பத்தி செலவுகள் அதிகரித்துள்ளது.ஆனால் விலை சரிந்துள்ளது. இதனால் தென்னை விவசாயிகள் என்ன செய்வதென்று தெரியாமல் உள்ளனர்.

## 6 சதவீத கொழுப்பு சத்து ஆவின் பால் அறிமுகம்

பதிவு செய்த நாள் : ஜூலை 05,2012,21:32 IST

கருத்தை பதிவு செய்ய

விருதுநகர் : ""விருதுநகர் மாவட்டத்தில் சமன்படுத்தாத நிலைப்படுத்திய பால் அறிமுகம் செய்யப்பட்டுள்ளதாக," ஆவின் பொதுமேலாளர் சதாசிவம் தெரிவித்தார்.

அவர் கூறியதாவது:

தீவிர பால் பண்ணை பெருக்கு திட்டத்தின் கீழ், அரசு நிதியுதவியுடன் பாலை சமன்படுத்தும் இயந்திரம், ரூ.12 லட்சத்திற்கு வாங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் சமன்படுத்தப்பட்ட, நிலைப்படுத்திய பால் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

ஜூலை 1 முதல் 6சதவீத கொழுப்பு சத்து, 9 சதவீத இதர சத்து உள்ள நிறை கொழுப்பு பாலை விற்பனைக்கு அறிமுகப்படுத்தியுள்ளது.

கூடுதல் சத்து உள்ளதால் இப்பால் அதிக அடர்த்தி மிகுந்தததாக இருக்கும்.

ஓட்டல்கள், டீக்கடைகள், திருமணம், போன்ற விசேஷங்களுக்கும் இந்த பால் உபயோகமாக

இருக்கும். ஆவின் மூலம் பால் பொருட்களான நெய், கோவா, சுவையூட்டிய பால், பதாம்பவுடர், மில்க்ஷேக், மேங்கோஷேக் முதலியவற்றை ஆவின் பாலகங்கள் மூலம் விற்பனை செய்யப்படுகின்றது.

பால் மற்றும் பால் பொருட்களை விற்பனை செய்ய ஆர்வமுள்ளவர்கள் முகவராவதற்கு, விருதுநகர் ஆவின் நிர்வாகத்தை போன் 04563 264 231 ல் தொடர்பு கொள்ளலாம், என்றார்.

**மான்ய விலையில் விதை விநியோகம்**

பதிவு செய்த நாள் : ஜூலை 05,2012,23:42 IST

கரூர்: "விவசாயிகளுக்கு மான்ய விலையில் விதைகள் வழங்கப்படுகிறது' என, க டவூர் தோட்டக்கலை இயக்குனர் வீரமணி தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: வீட்டு தோட்டத்துக்கு தேவையான ஆறு வகையான காய்கறி விதைகள், ஒரே பொட்டலமாக 50 சதவீத மான்யத்தில் வி வசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. மேலும், முருங்கை பி.கே.எம்., 1 ரக விதைகளும் விநியோகம் செய்யப்படுகிறது. விவசாயிகள் மான்ய விலையில் விதைகளை பெற்று அதிகளவில் சாகுபடி செய்து பயன்பெறலாம்.

**கால்நடை மேய்ச்சல் நிலங்கள் பயன்பாடு**

பதிவு செய்த நாள் : ஜூலை 05,2012,23:21 IST

கருத்தை பதிவு செய்ய

ஆத்தூர்: கால்நடை மேய்ச்சல் புறம்போக்கு நிலங்களின் பயன்பாடுகள் குறித்து, சேலம் மாவட்ட கலெக்டர் தலைமையிலான கால்நடைத்துறையினர், ஆத்தூர், தலைவாசல் பகுதியில் ஆய்வு பணிகள் மேற்கொண்டனர்.

தமிழகத்தில், சேலம் உள்பட பெரும்பாலான மாவட்டங்களில், விவசாய நிலம், வீட்டுமனை, தொழிற்சாலை, வணிக நிறுவனங்களாக மாறி வருகிறது. அதனால், உணவு உற்பத்தி பாதித்துள்ளது மட்டுமின்றி, கால்நடைகளுக்கான தீவன பயிர் பரப்பளவும் வெகுவாக குறைந்து விட்டது.

பருவ மழையின்றி வறட்சி மற்றும் போதிய மேய்ச்சல் நிலம் இல்லாததால், ஆடு, மாடுகள் வளர்ப்பும் குறையும் சூழல் உள்ளது. கால்நடைகள் அபிவிருத்தி செய்யும் வகையில், தமிழக முதல்வர் ஜெயலலிதா, விலையில்லா ஆடு, மாடுகள் வழங்கும் திட்டத்தை செயல்படுத்தியுள்ளார்.

சேலம் மாவட்டத்தில், 2011-12ல், 23 ஆயிரத்து 884 விலையில்லா ஆடுகள் என, தமிழகம் முழுவதும் மூன்று லட்சத்துக்கும் மேற்பட்ட பயனாளிகளுக்கு, ஆடு, மாடுகள் வழங்கப்பட்டுள்ளது. விவசாயிகள் வளர்த்து வரும் கால்நடைகள், அரசு வழங்கிய ஆடு, மாடுகளுக்கு போதிய தீவனம் கிடைக்காத நிலை உருவாகி வருவதாக, புகார் எழுந்தது.

தீவனப்பற்றாக்குறை போக்கும் வகையில், தீவனப்பயிர் அபிவிருத்தி திட்டம் எனும், புதிய திட்டத்தை, தமிழக அரசு கொண்டு வந்துள்ளது. இதில், முதல் கட்டமாக சேலம், நாமக்கல், ஈரோடு, தர்மபுரி, கிருஷ்ணகிரி உள்பட, 14 மாவட்டங்களில், இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ், ஒவ்வொரு மாவட்டத்திலும், கால்நடை பராமரிப்புத்துறை கட்டுப்பாட்டில் உள்ள, 100 ஏக்கர் மேய்ச்சல் நிலத்தில், முயல் மசால், கினியா புல் உள்ளிட்ட தீவன பயிர்களை வளர்த்து, கால்நடைகளுக்கு வழங்கப்படவுள்ளது. கால்நடைகளை மேய்ச்சலுக்கு விடுவதற்காக, வகைப்படுத்தியுள்ள நிலம் பயன்பாடு, ஆக்கிரமிப்பு போன்ற விபரங்களை அளிக்கும்படி, அனைத்து மாவட்ட கலெக்டர்களுக்கு, அரசு உத்தரவிட்டுள்ளது.

நேற்று, சேலம் மாவட்ட கலெக்டர் மகரபூஷணம் தலைமையிலான கால்நடை பராமரிப்புத்துறை அலுவலர்கள், வருவாய்த்துறையினர், ஆத்தூர், கெங்கவல்லி, தலைவாசல் உள்ளிட்ட பகுதிகளில், மேய்ச்சல் நிலம் மற்றும் அதன் பயன்பாடுகள் குறித்து நேரில் ஆய்வு செய்தனர்.

இந்த நிலங்களில், ஆக்கிரமிப்பு இருந்தால் விரைவில் அகற்றும்படி, வருவாய்த்துறையினருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்த நிலங்களில், கால்நடைகளின் மேய்ச்சலுக்கு, தீவன பயிர்கள் வளர்க்க, அரசு திட்டமிட்டுள்ளது.

---

தினத் தந்தி

## *முதல் காலாண்டில் காபி ஏற்றுமதி 9% குறைந்தது*

*பி கே கிருஷ்ணகுமார்*
*கொச்சி*

*நடப்பு நிதி ஆண்டின் முதல் காலாண்டில் (ஏப்ரல்–ஜூன்) காபி ஏற்றுமதி 9 சதவீதம் சரிவடைந்து 1.04 லட்சம் டன்னாக குறைந்துள்ளது. காபி ஏற்றுமதி இதையும் விட குறையும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், மதிப்பீடுகளுக்கு மாறாக ஏற்றுமதியில் குறைந்த அளவே சரிவு ஏற்பட்டுள்ளது.*

*இந்தியாவின் காபி ஏற்றுமதியில் ரோபஸ்டா ரகத்தின் பங்களிப்பே அதிகமாக இருந்து வருகிறது. சர்வதேச சந்தையில் இவ்வகை காபியின் விலை நிலையாக உள்ளது. எனவே முதல்*

காலாண்டில் நாட்டின் காபி ஏற்றுமதியில் அதிக வீழ்ச்சி ஏற்படாமல் ரூ.1,560 கோடி என்ற அளவில் உள்ளது. அராபிகா காபி விலை கடுமையாக சரிவடைந்துள்ளது. எனினும் இதனால் அதிக பாதிப்பில்லை.

அண்மைக் காலமாக டாலருக்கு நிகரான ரூபாய் மதிப்பு கடுமையாக சரிவடைந்துள்ளது. எனினும் காபி ஏற்றுமதியாளர்கள் இதன் பயனை முழுமையாக அடைய முடியவில்லை. உற்பத்தி குறைந்ததால் உள்நாட்டிலேயே காபிக்கு நல்ல விலை கிடைத்து வருவதே இதற்கு காரணம். இதுவும் ஏற்றுமதி குறைந்ததற்கு ஒரு காரணமாகும்.

இந்நிலையில் முதல் காலாண்டை விட ஜூலை–செப்டம்பர் மாத காலத்தில் காபி ஏற்றுமதி கடுமையாக குறையும் என ஏற்றுமதியாளர்கள் முன்னறிவிப்பு செய்துள்ளனர். நிதி நெருக்கடியில் சிக்கியுள்ள ஐரோப்பிய நாடுகளில் தேவைப்பாடு குறைந்துள்ளதே இதன் பின்னணியாக இருக்கும் என தெரிகிறது.

## குன்னூர் டீசர்வ் ஏல மையத்தில் 80 சதவீத தேயிலை தூள் விற்பனை

குன்னூர், ஜூலை.6–

குன்னூர் டீசர்வ் ஏல மையத்தில் 80.8 சதவீத தேயிலை தூள் விற்பனை யானது.

டீசர்வ் ஏலம்

நீலகிரி மாவட்டத்தில் கூட்டுறவு தேயிலை தொழிற் சாலைகள் உள்ளன. இங்கு உற்பத்தி செய்யப்படும் தேயிலை தூள் குன்னூர் டீசர்வ் ஏல மையத்தில் வாரந் தோறும் புதன்கிழமை ஏலம் விடப்படுகிறது. விற்பனை எண் 27–க்கான ஏலம் கடந்த 4–ந் தேதி நடைபெற்றது. ஏலத்துக்கு மொத்தம் 3 லட்சத்து 92 ஆயிரத்து 916 கிலோ தேயிலை தூள் வந்தது. இதில் 2 லட்சத்து 19 ஆயிரத்து 128 கிலோ தேயிலை தூள் இலை ரகமாகவும், 1 லட்சத்து 73 ஆயிரத்து 788 கிலோ டஸ்ட் ரகமாகவும் இருந்தது.

80 சதவீத தேயிலை தூள் விற்பனை

ஏலத்தில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வர்த்தகர்கள் கலந்து கொண்டு, ஆர்வத் துடன் தேயிலை தூளை ஏலம் எடுத்தனர். இலை ரகம் 2 லட்சத்து 14 ஆயிரத்து 780 கிலோ விற்பனையானது. இது 98 சதவீதமாகும். டஸ்ட் ரகத்தின் மொத்த அளவில் 1 லட்சத்து 72 ஆயிரத்து 31 கிலோ விற் பனையானது. இது விற்பனை சதவீதம் 98.99 சதவீதம் ஆகும். இதன்படி விற்பனைக்கு வந்த மொத்த தேயிலை தூள் அளவில் 80.8 சதவீத தேயிலை தூள் விற்பனையானது. சராசரி விலையாக இலை ரகத்தின் சாதாரண வகை ரூ.64–ல் இருந்து ரூ.80 வரை யிலும், விலை உயர்ந்த தேயிலை தூள் ரூ.84 முதல் ரூ.94 வரையிலும் ஏலம் சென்றது. டஸ்ட் ரகத்தின் சாதாரண வகை ரூ.71–ல் இருந்து ரூ.75 வரையிலும், விலை உயர்ந்த தேயிலை தூள் ரூ.80 முதல் ரூ.98 வரையிலும் விற்பனை யானது.

விற்பனை எண் 28–க்கான ஏலம் வருகிற 11–ந் தேதி நடைபெற உள்ளது.